Sl. No. :

**JET/18**

| பதிவு எண் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# 2018

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## (பட்டப் படிப்புத் தரம்)

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். **ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்பட மாட்டாது.**
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளை குறித்து காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு அறைக் கண்காணிப்பாளரால் தரப்படும்.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்டவற்றை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ

9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
10. **குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசிப் பக்கத்திற்கு முன் உள்ள பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம். இதைத் தவிர, வினாத் தொகுப்பின் எந்த இடத்திலும் எந்த வித குறிப்புகளையும் செய்யக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.**
11. விண்ணப்பதாரர்கள் விடையளிக்காமல் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கையை விடைத்தாளின் பக்கம் 2-ல் அதற்கென உரிய கட்டத்தில் எழுதி நிரப்பவும். இதற்கென கூடுதலாக ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும்.
12. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

SEAL

SPACE FOR ROUGH WORK

1. இவற்றுள் இந்தியாவில் பேசப்படாத மொழிக் குடும்பம்

(A) இந்தோ – ஆரிய மொழிகள்
(B) திராவிட மொழிகள்
(C) காகேசியன் மொழிகள்
(D) ஆஸ்டிரிக் மொழிகள்

2. தமிழில் கலந்துள்ள மராத்திச் சொற்கள்

(A) நாஸ்தா, லுங்கி
(B) சேமியா, கிச்சடி
(C) சம்சா, பூரி
(D) கைதி, வசூல்

3. இரண்டாம் மொழி என்று கூறப்படுவது

(A) தாய்மொழி அல்லாத மொழி
(B) பேச்சு மொழி
(C) ஆங்கிலம்
(D) இந்தி

4. பின்னிஷ், துருக்கி, மங்கோலியம் முதலிய மொழிகள் திராவிட மொழியோடு தொடர்பு கொண்டவை எனக் கூறியவர்?

(A) டட்டில்
(B) கால்டுவெல்
(C) மால்பின்
(D) பொற்கோ

5. துளு மொழி இன்று எந்தமொழி எழுத்தால் எழுதப்படுகிறது?

(A) தமிழ்
(B) தெலுங்கு
(C) கன்னடம்
(D) மலையாளம்

6. கல்வெட்டுக்களில் காணப்படும் தொண்மையான எழுத்து

(A) ஓவிய எழுத்து
(B) கிரந்த எழுத்து
(C) பிராமி எழுத்து
(D) வட்டெழுத்து

7. எட்டுத்தொகை நூல்களுள் அக நூல்கள் எத்தனை?

(A) 5
(B) 2
(C) 8
(D) 10

8. லீலா திலகம் – என்ற நூல், எந்தெந்த நாட்டு வழக்காறுகளையும், உச்சரிப்பையும் காட்டுகிறது?

(A) பாண்டிய நாட்டு, சோழ நாட்டு வழக்காறுகளையும் உச்சரிப்புகளையும்

(B) பாண்டிய நாட்டு, சேரநாட்டு வழக்காறுகளையும் உச்சரிப்புகளையும்

(C) சோழ நாட்டு, சேர நாட்டு வழக்காறுகளையும் உச்சரிப்புகளையும்

(D) சேர நாட்டு வழக்காறுகளையும் பாண்டிய நாட்டு வழக்காறுகளையும்

9. "வேட்டார்க்கு இனிதாயின் அல்லது நீர்க்கினி தென்று

உண்பவோ நீருண் பவர்" – என்ற பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல்

(A) நற்றிணை

(B) குறுந்தொகை

(C) ஐங்குறு நூறு

(D) கலித் தொகை

10. "நெல்லொடு நாழி கொண்டநறுவீ முல்லை

அரும்பு அவிழ் அலரி தூஉய்க் கைதொழுது

பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப"

இப்பாடலடிகள் இடம் பெறும் நூல்

(A) முல்லைப் பாட்டு

(B) நெடுநல்வாடை

(C) குறிஞ்சிப் பாட்டு

(D) பட்டினப்பாலை

11. ஐங்குறுநூற்றை முதன்முதலில் பதிப்பித்தவர்

(A) சி. வை. தாமோதரம் பிள்ளை

(B) உ.வே. சாமிநாத ஐயர்

(C) சு. துரைசாமிப்பிள்ளை

(D) நச்சினார்க்கினியர்

12. 'பதினெண் மேற்கணக்கு, பதினெண் கீழ்க்கணக்கு'

– என்ற வழக்காற்றில் கணக்கு என்பதன் பொருள்

(A) எண்

(B) எண்ணிக்கை

(C) நூல்

(D) பாட்டு

13. 'இயற்கையை வருணிப்பதில் உலகிலேயே தலைசிறந்தவர்'

– என்று தனிநாயக அடிகளாரால் போற்றப்படுபவர்

(A) பரணர்

(B) நல்லந்துவனார்

(C) கபிலர்

(D) நப்பூதனார்

14. ‘ஐந்திணை எழுபது’ – ஆசிரியர் யார்?

(A) மாறன் பொறையனார்
(B) மூவாதியார்
(C) கண்ணன் சேந்தனார்
(D) கணி மேதாவியார்

15. “யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்”
–இப்பாடலடிகள் இடம் பெற்ற சங்க நூல்

(A) புற நானூறு
(B) பட்டினப்பாலை
(C) அக நானூறு
(D) மதுரைக் காஞ்சி

16. நற்றிணை இலக்கியத்தைத் தொகுப்பித்த மன்னன்

(A) பன்னாடுதந்த பாண்டியன் மாறன் வழுதி
(B) யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை
(C) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
(D) செல்வக் கடுங்கோ வாழியாதன்

17. பத்துப்பாட்டில் அடி அளவில் சிறிய பாட்டு

(A) குறிஞ்சிப் பாட்டு
(B) முல்லைப் பாட்டு
(C) பட்டினப்பாலை
(D) நெடுநல்வாடை

18. அகநானூற்றுத் திணைப் பாடல்களை எண் முறைப்படி பொருத்துக

(a) குறிஞ்சி 1. 4, 14, 24, 34
(b) பாலை 2. 2, 8, 12, 18
(c) முல்லை 3. 6, 16, 26, 36
(d) மருதம் 4. 1, 3, 5, 7,

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

19. ஐங்குறுநூறு யாரால் தொகுக்கப்பட்டது?

(A) பூரிக்கோ
(B) பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி
(C) கூடலூர் கிழார்
(D) நல்லந்துவனார்

20. பொருத்துக :

| | நூல் | | ஆசிரியர் |
|---|---|---|---|
| (a) | திருமுருகாற்றுப்படை | 1. | மாங்குடி மருதனார் |
| (b) | சிறுபாணாற்றுப்படை | 2. | கடியலூர் உருத்திரங் கண்ணனார் |
| (c) | பெரும்பாணாற்றுப்படை | 3. | நத்தத்தனார் |
| (d) | மதுரைக் காஞ்சி | 4. | நக்கீரர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

21. 'களவழி நாற்பது' – என்ற நூலை எழுதிய ஆசிரியர் யார்?

(A) கூடலூர் கிழார்

(B) மாறன் பொறையனார்

(C) பொய்கையார்

(D) மதுரைக் கண்ணன் கூத்தனார்

22. நாளங்காடி, அல்லங்காடி பற்றிக் கூறும் நூல்?

(A) நெடுநல்வாடை

(B) மதுரைக் காஞ்சி

(C) பெரும்பாணாற்றுப்படை

(D) திருமுருகாற்றுப்படை

23. "காரி உண்டிக் கடவுள்" – இத்தொடர் குறிப்பிடும் கடவுள்

(A) சிவன

(B) திருமால்

(C) இந்திரன்

(D) முருகன்

24. "நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று நீரினும் ஆரளவின்றே..." என்று காதலின் அளவினை எடுத்துரைக்கும் நூல்

(A) கலித்தொகை

(B) குறுந்தொகை

(C) அகநானூறு

(D) ஐங்குறுநூறு

25. பொருத்துக :

| | பதிற்றுப்பத்தின் பாட்டுடைத் தலைவர்கள் | | பாடிய புலவர்கள் |
|---|---|---|---|
| (a) | களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் | 1. | பெருங்குன்றூர்க்கிழார் |
| (b) | கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் | 2. | காப்பியாற்றுக் காப்பியன |
| (c) | செல்வக்கடுங்கோ வாழியாதன் | 3. | கபிலர் |
| (d) | இளஞ்சேரல் இரும்பொறை | 4. | பரணர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

26. ஆற்றுப்படை நூல்களுள் அடியளவில் பெரியது

(A) திருமுருகாற்றுப்படை
(B) சிறுபாணாற்றுப்படை
(C) கூத்தராற்றுப்படை
(D) பெரும்பாணாற்றுப்படை

27. "திருமுருகாற்றுப்படை" என்ற நூலை இயற்றியவர்

(A) நப்பூதனார்
(B) நக்கிரர்
(C) முடத்தாமக்கண்ணியார்
(D) நத்தத்தனார்

28. "உண்பது நாழி உடுப்பவை இரண்டே" – என்ற பாடல் அடி இடம்பெற்றுள்ள நூல்

(A) மதுரைக் காஞ்சி
(B) பரிபாடல்
(C) புறநானூறு
(D) பதிற்றுப்பத்து

29. 'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி' என்ற அடி இடம் பெற்றுள்ள நூல்

(A) திருக்குறள்
(B) நாலடியார்
(C) பழமொழி நானூறு
(D) ஆசாரக் கோவை

30. திருக்குறள் காமத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை

(A) 70
(B) 38
(C) 25
(D) 40

31. திருக்குறள் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவை எவை?

I. திருக்குறளை நச்சினார்க்கினியர் 'திருவள்ளுவப்பயன்' என்று குறிப்பிடுகின்றார்.

II. திருக்குறளைச் சிறப்பிக்கும் பழம் பெயர்களுள் ஒன்று 'உத்தரவேதம்' என்பதாகும்

III. திருக்குறள் பெருமுத்தரையர்களைப் பற்றிக் கூறுகிறது.

IV. திருக்குறளின் பொருட்பால், மூன்று இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

(A) I, II மற்றும் IV சரியானவை
(B) II, III மற்றும் IV சரியானவை
(C) I மற்றும் II சரியானவை
(D) III மற்றும் IV சரியானவை

32. பொருத்துக :

| | நூல் | | ஆசிரியர் |
|---|---|---|---|
| (a) | சோமேசர் முதுமொழி வெண்பா | 1. | வேதநாயகம் பிள்ளை |
| (b) | பெண்மதிமாலை | 2. | சிவஞான முனிவர் |
| (c) | உலக நீதி | 3. | ஔவையார் |
| (d) | கொன்றை வேந்தன் | 4. | உலகநாத பண்டிதர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

33. பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்

நன்மை கடலின் பெரிது – இக்குறட்பாவில் 'நயன் தூக்கின்' எனும் சொல்லின் பொருள் யாது?

(A) குற்றமற்ற உறவு ஆராய்தல்
(B) தீமையைப் பொறுத்தல்
(C) பண்பினை ஆராய்தல்
(D) நன்மையின் பெருமையை ஆராய்தல்

34. கல்வி கரையில கற்பவர் நாள் சில

மெல்ல நினைக்கின் பிணிபல; தெள்ளிதின்

எனும் அடிகள் இடம் பெறுவது

(A) திருக்குறள்
(B) நான்மணிக்கடிகை
(C) நாலடியார்
(D) ஏலாதி

35. திரிகடுகம் நூலின் ஆசிரியர் பெயர் என்ன?

(A) கணிமேதாவியார்
(B) விளம்பிநாகனார்
(C) பூதஞ்சேந்தனார்
(D) நல்லாதனார்

36. பொருந்தாத இணையினைத் தெரிவு செய்க

(A) வெல்வது வேண்டின் வெகுளிவிடல் – நான்மணிக்கடிகை
(B) நெஞ்சம் அடங்குதல் வீடாகும் – திரிகடுகம்
(C) தமக்கு மருத்துவர் தாம் – பழமொழி
(D) முதலிலார்க் கூதியமில் – ஆசாரக்கோவை

37. "அன்பே தகளியாக ஆர்வமே நெய்யாக" – என்று இறைவனைப் பாடியவர்

(A) பொய்கையாழ்வார்
(B) பூதத்தாழ்வார்
(C) பேயாழ்வார்
(D) பெரியாழ்வார்

38. "கருப்பூரம் நாறுமோ கமலப் பூ நாறுமோ" என்று வெண் சங்கிடம் திருமாலின் வாய்ச்சுவையும், நாற்றமும் குறித்து கேட்டவர்

(A) ஆண்டாள்
(B) திருமங்கையாழ்வார்
(C) நம்மாழ்வார்
(D) மதுரகவியாழ்வார்

39. பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ள தொகையடியார்களின் எண்ணிக்கை

(A) ஆறு
(B) ஒன்பது
(C) ஏழு
(D) பன்னிரண்டு

40. பட்டர்பிரான் என்னும் பட்டம் பெற்றவர்

(A) நம்மாழ்வார்
(B) குலசேகர ஆழ்வார்
(C) மதுரகவியாழ்வார்
(D) பெரியாழ்வார்

41. “தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்” என்று பாடியவர்

(A) சம்பந்தர்
(B) மாணிக்கவாசகர்
(C) திருநாவுக்கரசர்
(D) சுந்தரர்

42. பெண்கள் நெல் குற்றும் போது பாடுகின்ற பாட்டிற்குப் பெயர்

(A) ஊசல் வரி
(B) அம்மானை
(C) கழங்கு
(D) வள்ளைப்பாட்டு

43. “சும்மா இருப்பதே சுகம்” என்று கூறியவர்

(A) இராமலிங்க அடிகள்
(B) அருணகிரியார்
(C) தாயுமானவர்
(D) சிவப்பிரகாசர்

44. “ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே” – என்று பாடியவர்

(A) சுந்தரர்
(B) திருநாவுக்கரசர்
(C) திருஞானசம்பந்தர்
(D) மாணிக்கவாசகர்

45. “எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையாரும் இல்லை”
– என்று கூறியவர்

(A) சேக்கிழார்
(B) கச்சியப்பச் சிவாச்சாரியார்
(C) நல்லூர் வீரகவிராயர்
(D) கம்பர்

46. கந்தபுராணத்தின் ஆசிரியர்

(A) கச்சியப்பச் சிவாச்சாரியார்
(B) நல்லூர் வீரகவிராயர்
(C) பரஞ்சோதி முனிவர்
(D) கொங்குவேளிர்

47. யசோதர காவியத்தில் வரும் யசோதரனின் தந்தை பெயர்

(A) சச்சந்தன்
(B) அசோகன்
(C) மாரிதத்தன்
(D) காளன்

48. மருதநில நூலாகக் கருதப்படும் சிற்றிலக்கியம்

(A) பள்ளு
(B) குறவஞ்சி
(C) பரணி
(D) தூது

49. மீனாட்சியம்மை குறம் பாடியவர்

(A) திரிகூடராசப்பக் கவிராயர்
(B) குமரகுருபரர்
(C) மீனாட்சி
(D) நந்திவர்மன்

50. வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழி எறிந்து வானவரை அழைப்பர்
– இப்பாடல் வரிகள் இடம்பெறும் நூல்

(A) திருக்குற்றாலக் குறவஞ்சி
(B) சரபேந்திர பூபாலக் குறவஞ்சி
(C) தோழி விடு தூது
(D) மயில் விடு தூது

51. காலத்தால் முந்திய கலம்பக நூல்

(A) மதுரைக் கலம்பகம்
(B) நந்திக் கலம்பகம்
(C) தில்லைக் கலம்பகம்
(D) கச்சிக் கலம்பகம்

52. கலம்பகத்தில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை

(A) 2
(B) 10
(C) 18
(D) 4

53. கமலை ஞானப்பிரகாசர் இயற்றிய பள்ளு

(A) முக்கூடற்பள்ளு
(B) திருவாரூர்ப்பள்ளு
(C) குருகூர்ப்பள்ளு
(D) திருமலைப்பள்ளு

54. 'முக்கூடற்பள்ளு' – என்ற நூலின் ஆசிரியர்

(A) பள்ளன்
(B) பள்ளி
(C) புகழேந்திப் புலவர்
(D) ஆசிரியர் யார் எனத் தெரியவில்லை

55. எந்த நில மக்களைப் பற்றிப் பள்ளு இலக்கியம் பாடப்பட்டது?

(A) மருதம்
(B) குறிஞ்சி
(C) முல்லை
(D) நெய்தல்

56. நாம மாலை – என்பதன் விளக்கம்

(A) கண்களைச் சிறப்பித்து பாடுவது
(B) பெண்களைப் புகழ்ந்து பாடுவது
(C) தலைமக்களைப் புகழ்ந்து பாடுவது
(D) மாலையைப் பற்றிப் பாடுவது

57. 'கோவை' நூல்களில் முதல் கோவை நூல்

(A) திருக்கோவையார்
(B) பாண்டிக் கோவை
(C) தஞ்சைவாணன் கோவை
(D) திருத்தலக் கோவை

58. "அற்புதத் திருவந்தாதி" – யைப் பாடியவர்

(A) காரைக்கால் அம்மையார்
(B) திருஞானசம்மந்தர்
(C) மாணிக்கவாசகர்
(D) திருநாவுக்கரசர்

59. பன்னிருபாட்டியல் மூன்று இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது, அவை

(A) எழுத்தியல், சொல்லியல், பொருளியல்
(B) எழுத்தியல், சொல்லியல், இனவியல்
(C) சொல்லியல், தொடரியல், பொதுவியல்
(D) எழுத்தியல், பொருளியல், பாவியல்

60. தும்பைப் போரில் தேருக்கு முன்னே ஆடிச் செல்வது வீரர்கள்.
வாகைத் திணையில் தேருக்கு முன்னே ஆடிச் செல்வது ————

(A) விறலியர்
(B) பாணர்
(C) துடியர்
(D) பேய்கள்

61. –தான், –தாம் ஆகிய சொற்கள்

(A) உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள்

(B) பகிர்வுப் பதிலிடு பெயர்கள்

(C) தற்சுட்டுப் பதிலிடு பெயர்கள்

(D) முழுமைப் பதிலிடு பெயர்கள்

62. செய்யுள் ஈட்டச் சொற்கள் (எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவன)

(A) செந்தமிழ்ச் சொல், கொடுந்தமிழ்ச் சொல், பைந்தமிழ்ச் சொல், தீந்தமிழ்ச் சொல்

(B) இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்

(C) பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்

(D) பெயர்ச்சொல், வினைச்சொல், அசைச்சொல், வடசொல்

63. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | வெட்சி | 1. | பேய்நிலை |
| (b) | காஞ்சி | 2. | அவிப்பலி |
| (c) | தும்பை | 3. | வேய் |
| (d) | வாகை | 4. | நூழிலாட்டு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

64. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல் – இக்குறளில் பயின்று வரும் அணி எது?

(A) உவமை அணி

(B) உருவக அணி

(C) வேற்றுமை அணி

(D) தீவக அணி

65. 'தீவகம்' என்னும் சொல்லின் பொருள்

(A) மாலை

(B) சங்கு

(C) விளக்கு

(D) அணிகலன்

66. ஐந்து அடியைச் சிற்றெல்லையாகக் கொண்டு பல அடிகளால் பாடப் பெறுவது

(A) சிந்தியல் வெண்பா

(B) நேரிசை வெண்பா

(C) இன்னிசை வெண்பா

(D) பஃறொடை வெண்பா

67. முதன்முதலில் மேடையில் நடிக்கப் பெற்ற சமூக நாடகம்

(A) மத்தவிலாசப் பிரகசனம்

(B) டம்பாச்சாரி

(C) சுந்திரவிலாசம்

(D) அரிச்சந்திர விலாசம்

68. உ.வே.சா. அவர்களின் ஆசிரியர் யார்?

(A) எஸ்.வையாபுரிப் பிள்ளை

(B) வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார்

(C) பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார்

(D) மீனாட்சி சுந்தரம் பிள்ளை

69. மு. வரதராசனின் சாகித்ய அகாதெமி பரிசு பெற்ற நாவல்

(A) கரித்துண்டு

(B) அகல் விளக்கு

(C) பெற்ற மனம்

(D) கள்ளோ காவியமோ

70. கல்கி எழுதிய முதல் வரலாற்று நாவல்

(A) விமலா

(B) பார்த்திபன் கனவு

(C) பொன்னியின் செல்வன்

(D) சிவகாமியின் சபதம்

71. ஜெயகாந்தன் பற்றிய கீழ்க்காணும் கூற்றுக்களில் சரியானவை எவை?

I. ஜெயகாந்தன் எழுதிய நாவல்களுள் ஒன்று 'பாரிசுக்குப் போ'.

II. ஜெயகாந்தன் எழுதிய 'ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்' என்னும் நாவலுக்குச் சாகித்ய அகாடமி விருது கிடைத்துள்ளது.

III. ஜெயகாந்தன் 'சிறுகதை ஜாம்பவான்' என்று புகழப்படுகிறார்.

IV. ஜெயகாந்தன் துப்பறியும் நாவல்கள் பலவற்றை எழுதியுள்ளார்.

(A) I மற்றும் II சரியானவை

(B) II மற்றும் III சரியானவை

(C) III மற்றும் IV சரியானவை

(D) I மற்றும் III சரியானவை

72. 'மான விஜயம்' என்ற ஓரங்க நாடகத்தின் ஆசிரியர்

(A) பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

(B) வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரி

(C) சங்கரதாஸ் சுவாமிகள்

(D) பம்மல் சம்பந்த முதலியார்

73. கானல் வரி - என்ற நூலின் ஆசிரியர்

(A) ம. இராசமாணிக்கனார்

(B) இரா. பி. சேதுப்பிள்ளை

(C) இரா. இராகவையங்கார்

(D) தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்

74. சங்கரதாஸ் சுவாமிகள் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவை எவை?

I. சங்கரதாஸ் சுவாமிகள் சமரச சன்மார்க்க நாடக சபை என்ற நாடகக் குழுவை நிறுவியவர்

II. சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய நாடகங்களில் ஒன்று சத்தியவான் சாவித்திரி

III. கீர்த்தனைப் பாடல்களைத் தம் நாடகங்களில் மிகுதியாகப் பயன்படுத்தியவர் சங்கரதாஸ் சுவாமிகள்

IV. சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய நாடகங்களில் ஒன்று டம்பாச்சாரி விலாசம்

(A) I, II மற்றும் III சரியானவை

(B) II, III மற்றும் IV சரியானவை

(C) I, III மற்றும் IV சரியானவை

(D) I, II III மற்றும் IV அனைத்தும் சரியானவை

75. பன்முகத் தன்மைத்; விளிம்போரங்களைப் போற்றுவது; நிகழ்வுகளை மொழி விளையாட்டாகக் காண்பது - இத்தகைய அணுகுமுறை

(A) நவீனத்துவம்

(B) பின்னை நவீனத்துவம்

(C) உருவவியல்

(D) பின்னை அமைப்பியல்

76. பட்டியல் ஒன்றுடன் பட்டியல் இரண்டைப் பொருத்தி, பட்டியல்களுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்க

| பட்டியல் ஒன்று | | | பட்டியல் இரண்டும் |
|---|---|---|---|
| (a) | கி. ராஜநாராயணன் | 1. | பதினெட்டாம் பெருக்கு |
| (b) | ந.பிச்சமூர்த்தி | 2. | புனர்ஜென்மம் |
| (c) | கு.ப. ராஜகோபாலன் | 3. | அழியாச் சுடர் |
| (d) | மௌனி | 4. | நாற்காலி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

77. தமிழ் உரைநடை உலகில் 'சொல்லின் செல்வர்' - என்று பாராட்டப்பட்டவர்

(A) திரு. வி. கல்யாணசுந்தரனார்
(B) ரா.பி. சேதுப்பிள்ளை
(C) வ. சுப. மாணிக்கம்
(D) மு. வரதராசன்

78. தமிழில் தோன்றிய முதல் வரலாற்றுப் புதினம்

(A) மோகனாங்கி
(B) கடல் புறா
(C) பார்த்திபன் கனவு
(D) பொன்னியின் செல்வன்

79. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அலையன்ஸ் | 1. | சுதைமா |
| (b) | சிமெண்ட் | 2. | கிழிப்பம் |
| (c) | ஏஜன்ஸீஸ் | 3. | நேசக்கூட்டு |
| (d) | கூப்பன் | 4. | முகவாண்மைகள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

80. 'மனச்சிறகு' என்ற நூலின் ஆசிரியர்

(A) மு. மேத்தா
(B) காமராசன்
(C) மீரா
(D) சிற்பி பாலசுப்பிரமணியம்

81. பட்டியல் ஒன்றுடன் பட்டியல் இரண்டைப் பொருத்தி பட்டியல்களுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்க

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| (a) | முடியரசன் | 1. | தேன்மழை |
| (b) | வாணிதாசன் | 2. | மாங்கனி |
| (c) | சுரதா | 3. | பூங்கொடி |
| (d) | கண்ணதாசன் | 4. | சிரித்த நுணா |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

82. 'நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி நடந்த இளந்தென்றலே'
-இந்த திரைப்படப் பாடல் வரிகளை எழுதியவர் யார்?

(A) உடுமலை நாராயணகவி
(B) மாயவநாதன்
(C) கண்ணதாசன்
(D) மருதகாசி

83. 'ஷெல்லி தாசன்' - என்ற புனைப்பெயரில் கவிதைகள் புனைந்தவர்

(A) பாரதியார்
(B) பாரதிதாசன்
(C) சுரதா
(D) வாணிதாசன்

84. 'தமிழிசைக்கொரு தியாகராஜர்' எனப் பாராட்டப்பட்டவர்

(A) பாபநாசம் சிவன்
(B) மருதகாசி
(C) வாலி
(D) உடுமலை நாராயணகவி

85. 1906 ஆம் ஆண்டு பாரதியார் தொடங்கிய பத்திரிகை

(A) சுதேசமித்திரன்
(B) சக்கரவர்த்தினி
(C) இந்தியா
(D) ஸ்ரீசுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்

86. நாட்டுப்புறவியலைக் குறிக்கும் Folk lore என்ற சொல் யாரால்? எந்த ஆண்டு உருவாக்கப் பெற்றது

(A) 1848 - ஜான் வில்லியம் தாமஸ்

(B) 1846 - வில்லியம் ஜான் தாமஸ்

(C) 1856 - வில்லியம் ஜெ கென்ரி

(D) 1857 - தாமஸ் மவுன்

87. பண்டைக் காலத்தில் ஆறலை கள்வர் நடமாட்டத்தை சத்தம் எழுப்பி எச்சரிக்கும் 'கணந்துள்' பறவை பற்றிய குறிப்பு காணப்படும் நூல்

(A) குறுந்தொகை

(B) பதிற்றுப்பத்து

(C) திருமுருகாற்றுப்படை

(D) சிலப்பதிகாரம்

88. பொருத்தமான இணையைக் கண்டறிக

| | இயற்பெயர் | | புனை பெயர் |
|---|---|---|---|
| (A) | சுந்தரராமசாமி | – | மயன் |
| (B) | க.நா. சுப்பிரமண்யம் | – | வே. மாலி |
| (C) | ந. பிச்சமூர்த்தி | – | பிக்ஷு |
| (D) | சி. மணி | – | பசுவய்யா |

89. அச்சுப் பொறியைக் கண்டுபிடித்த ஆண்டு

(A) கி.பி. 1451

(B) கி.பி. 1449

(C) கி.பி. 1350

(D) கி.பி. 1450

90. ஜவஹர்லால் நேரு தலைவராக இருந்த இதழின் பெயர்

(A) இந்தியன் நேஷன்

(B) நேஷனல் ஹெரால்டு

(C) நியூ இந்தியா

(D) நவஜீவன்

91. பொருந்தாத இணையைச் சுட்டுக

| | | | |
|---|---|---|---|
| (A) | முதல் சைவ சமய இதழ் | - | வீரகேசரி |
| (B) | முதல் வைணவ சமய இதழ் | - | திராவிட பாகவதன் |
| (C) | முதல் சமண சமய இதழ் | - | தருமசீலன் |
| (D) | முதல் கடவுள் மறுப்பு இயக்க இதழ் | - | விடுதலை |

92. காரினில் அகத்தில் நல்ல

கதிரொளி நீதான்; இந்த

பாரிடைத் துயில்வோர் கண்ணிற்

பாய்ந்திடும் எழுச்சி நீதான் – எனப் பாரதிதாசன் பாடுவது யாரை?

(A) பாஞ்சாலி
(B) தமிழ்த்தாய்
(C) கண்ணம்மா
(D) பத்திரிக்கைப் பெண்

93. 1965 ஆம் ஆண்டு புதுதில்லியில் தொடங்கப் பெற்ற இதழ்

(A) புதிய வானம்
(B) வானம்பாடி
(C) சிகரம்
(D) கணையாழி

94. ஸ்ரீ சுப்பிரமணிய கவிதா மண்டலம் எனும் இதழைத் தொடங்கியவர்

(A) பாரதி
(B) பாரதிதாசன்
(C) இராஜாஜி
(D) புலவர் குழந்தை

95. உடன் கட்டை ஏறும் வழக்கத்தைத் தடுத்து நிறுத்தும் வகையில் இராஜாராம் மோகன்ராய் வெளியிட்ட இதழ்கள்

(A) சம்பாத் கௌமுகி; மீரட் அல் அக்பர்
(B) தீக்தர்சன், வர்தமான்
(C) மொம்பய், ஜாம் – இ – ஜாம்வுத்
(D) பிராமணிகல் மேகசின், பிராமிண் சேவதி

96. "தலையங்கம் எழுதுபவருக்குக் கற்றுக் கொடுக்க,

தாக்க, காக்க, புகழ – நான்கு வகை வாய்ப்புகள் கிடைக்கின்றன" யார் கூற்று

(A) எம்.வி. காமத்
(B) ஆர்தர் பிரிஸ்பேனே
(C) ஜான் ஹோஹன் பர்க்
(D) பாரதியார்

97. மொழி ஒப்பாய்வில் * எனும் குறியீடு எதனைச் சுட்டுகிறது?

(A) மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட சொல் (B) பழமையான சொல்

(C) பிற மொழிச் சொல் (D) பேச்சு மொழிச் சொல்

98. தொல்திராவிட மொழியில் நான்கு என்ற எண்ணைக் குறிக்கும் "நால்கு" என்ற சொல் இடம்பெற்றுள்ள சங்க இலக்கிய நூல்கள்

(A) புறநானூறு, மலைபடுகடாம் (B) அகநானூறு, பதிற்றுப்பத்து

(C) நற்றிணை, குறுந்தொகை (D) பெரும்பாணாற்றுப்படை, அகநானூறு

99. கீழ்க்காணும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லைக் கண்டறிந்து பொருத்துக :

| | ஆங்கிலச் சொல் | | தமிழாக்கம் |
|---|---|---|---|
| (a) | Litotes | 1. | ஆகுபெயர் |
| (b) | Meliorative tendency | 2. | இடக்கரடக்கல் |
| (c) | Pejorative tendency | 3. | வன்பொருட் பேறு |
| (d) | Metonomy | 4. | மங்கல வழக்கு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

100. ஆஸ்பித்திரி, பட்டாளம் ஆகிய சொற்களின் மூல மொழி

(A) உருது (B) பாரசீகம்

(C) பிரெஞ்சு (D) போர்ச்சுகீசு

101. பேச்சிழப்பு (aphasia) ஏற்படுவதற்குக் காரணம்

(A) நுரையீரல் பாதிப்பு (B) குரல் நாண்கள் பாதிப்பு

(C) வாயறை பாதிப்பு (D) மூளை பாதிப்பு

102. திராவிட மொழிகளும் மைதன்னி மொழியும் தம்முன் இனவொற்றுமையுடையன என்று கூறியவர்

(A) சாட்டர்ஜி (B) பிரௌன்

(C) லாகோவரி (D) ஸ்டென்கனோவ்

103. கீழ்க்காணும் கருத்துகளில் தவறானதைத் தெரிவு செய்க

(A) வெங்காயத்தை ஈராங்காய் என்பது செட்டி நாட்டு மரபு

(B) குரல்வளையை ஊட்டி என்பது சோழ நாட்டு மரபு

(C) சமையல் அறையை அட்டாவி என்பது நாஞ்சில் நாட்டு மரபு

(D) மீண்டும் என்பதை மறுகாளி என்பது கொங்கு நாட்டு மரபு

104. பொருத்துக :

(a) அல்பேனியன் — 1. வட திராவிட மொழி

(b) துளு — 2. நடுத்திராவிட மொழி

(c) கூயி — 3. தென் திராவிட மொழி

(d) மால்தோ — 4. இந்தோ ஐரோப்பிய மொழி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

105. இந்தியா 'மொழிகளின் நிலம்' – என்றுரைத்த மொழியியல் அறிஞர்கள்

(A) கால்டுவெல், சீகன்பால்கு

(B) பர்ரோ, எமனோ

(C) சீகன்பால்கு, ஜி.யூ.போப்

(D) கால்டுவெல், ஜி.யூ.போப்

106. பிறமொழிச் சொற்கள் என்பது

(A) வட சொற்கள்

(B) திசைச் சொற்கள்

(C) திரி சொல்

(D) இயற்சொல்

107. இந்தியாவில் இந்திக்கு அடுத்தபடியாக அதிக மக்களால் பேசப்படும் திராவிட மொழி

(A) தமிழ்

(B) உருது

(C) மலையாளம்

(D) தெலுங்கு

108. டார்வினின் பரிணாமக் கொள்கையையொட்டி மொழியின் பரிணாமத்தை ஆராய்ந்தவர்

(A) ராஸ்க்

(B) ஆகஸ்ட் சிலேகர்

(C) பாப்

(D) கிரீம்

109. முல்லைக் கலியைப் பாடியவர் யார்?

(A) பெருங்கடுங்கோ
(B) கபிலர்
(C) நல்லந்துவனார்
(D) நல்லுருத்திரனார்

110. "நலம்மிகு கார்த்திகை நாட்டவர் இட்ட
தலைநாள் விளக்கின் தகையுடைய ஆகிப்
புலமெல்லாம் பூத்தன தோன்றி". – என்ற
பாடல் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்

(A) முல்லைப் பாட்டு
(B) ஐந்திணை எழுவது
(C) ஐந்திணை ஐம்பது
(D) கார் நாற்பது

111. குறுந்தொகையில் மிக அதிகமாகப் பாடல்கள் பாடிய இரு பெண்பாற் புலவர்கள்

(A) நன்னாகையார், வெள்ளிவீதியார்
(B) ஔவையார், ஆதிமந்தி
(C) வெள்ளி வீதியார், வெண் பூதியார்
(D) நன்னாகையார், ஔவையார்

112. தருமி பொற்கிழி பெற்ற நிகழ்ச்சிக்கு அடிப்படையாக அமைந்த "கொங்கு தேர் வாழ்க்கை" எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்ற நூல்

(A) குறிஞ்சிப் பாட்டு
(B) குறுந்தொகை
(C) நற்றிணை
(D) முல்லைப் பாட்டு

113. ஐங்குறுநூற்றில் அந்தாதி முறையில் அமைந்துள்ள பத்து

(A) தொண்டிப் பத்து
(B) கிள்ளைப் பத்து
(C) மயில் பத்து
(D) கேழற் பத்து

114. பாரதக் கதைகளை மிகுதியும் கூறும் சங்க அக நூல்

(A) குறுந்தொகை
(B) கலித் தொகை
(C) அக நானூறு
(D) ஐங்குறு நூறு

115. நெடுந்தொகை – என்றழைக்கப்படும் எட்டுத் தொகை நூல் எது?

(A) நற்றிணை
(B) குறுந்தொகை
(C) அகநானூறு
(D) ஐங்குறுநூறு

116. குறிஞ்சிக்கலி பாடிய புலவர் யார்?

(A) பெருங்கடுங்கோன்
(B) மருதனிள நாகனார்
(C) கபிலர்
(D) நல்லுருந்திரனார்

117. 'கைந்நிலை' என்ற நூலின் திணை வைப்பு முறை

(A) குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல்
(B) பாலை, குறிஞ்சி, மருதம், நெய்தல்
(C) மருதம், முல்லை, நெய்தல், குறிஞ்சி, பாலை
(D) நெய்தல், குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம்

118. நெடுநல் வாடையின் ஆசிரியர் யார்?

(A) கபிலர்
(B) மாங்குடி மருதனார்
(C) நக்கீரர்
(D) நப்பூதனார்

119. 'மறம் வீங்கு பல்புகழ்' எனும் தொடர் குறிப்பிடும் பொருள்

(A) அரசனின் கொடை
(B) அரசனின் போர்
(C) அரசனின் வீரம்
(D) அரசனின் வலிமை

120. எட்டுத்தொகை நூல்களுள் அகப் புறப்பாடல்களைக் கொண்ட நூல்

(A) ஐங்குறுநூறு
(B) பரிபாடல்
(C) பதிற்றுப்பத்து
(D) கலித்தொகை

121. அதியமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்ற புலவர்

(A) ஔவையார்
(B) கோவூர்க்கிழார்
(C) பெருஞ்சித்திரனார்
(D) பிசிராந்தையார்


[Turn over

122. சேர மன்னர்களை மட்டுமே பாடிய எட்டுத்தொகை நூல்

(A) பதிற்றுப்பத்து

(B) பரிபாடல்

(C) புறநானூறு

(D) குறுந்தொகை

123. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | திருமுருகாற்றுப்படை | 1. | 269 அடி |
| (b) | பெரும்பாணாற்றுப்படை | 2. | 248 அடி |
| (c) | சிறுபாணாற்றுப்படை | 3. | 317 அடி |
| (d) | பொருநராற்றுப்படை | 4. | 500 அடி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 1 | 4 | 3 | 2 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

124. "யாஅம் இரப்பவை

பொருளும் பொன்னும் போகமும் அல்ல; நின்பால்

அருளும் அன்பும் அறனும் மூன்றும்" – இவ்வடிகளின் ஆசிரியர் யார்?

(A) குமட்டூர் கண்ணனார்

(B) கடுவன் இளவெயினனார்

(C) காக்கைப் பாடினியார்

(D) காப்பியாற்றுக் காப்பியனார்

125. எந்த நூலின் ஒவ்வொரு பாட்டும் பாட்டில் வரும் பெயரையே தலைப்பாகக் கொண்டுள்ளது?

(A) பரிபாடல்

(B) பதிற்றுப்பத்து

(C) கலித்தொகை

(D) ஐங்குறுநூறு

126. கறவாப் பால்முலை கவர்தல் நோனாது

புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில்

மேற்கண்ட அடிகளில் இடம் பெறும் – செய்தி

(A) நாட்டின் சிறப்பு

(B) பாணர் வறுமை

(C) பாணரின் செல்வச்செழிப்பு

(D) மன்னரின் சிறப்பு

127. நெய்தல், ஆம்பல், குவளை, சங்கம் போன்ற பேரெண்களைப் பற்றிக் குறிப்பிடும் நூல்

(A) புறநானூறு

(B) பதிற்றுப்பத்து

(C) மதுரைக்காஞ்சி

(D) பரிபாடல்

128. கருவி வானம் போல

வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே !

எனும் புறப்பாடல் குறிப்பிடும் மன்னன் யார்?

(A) காரி

(B) அதியமான்

(C) ஆய்

(D) ஓரி

129. 'நிலத்துக்கு அணியென்ப நெல்லும் கரும்பும் ;

குளத்து அணியென்ப தாமரை; பெண்மை

நலத்து அணியென்ப நாணம்; தனக்கு அணியாம்

தான் செல் உலகத்து அறம்'

– என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் யாது?

(A) நாலடியார்

(B) இன்னா நாற்பது

(C) நான்மணிக்கடிகை

(D) சிறுபஞ்சமூலம்

130. இன்னா நாற்பது நூலின் பா வகை

(A) குறள் வெண்பா

(B) இன்னிசை வெண்பா

(C) நேரிசை வெண்பா

(D) அகவற்பா

131. 'பெற்ற தாயைக் கண்ணெனக் காத்தல் வேண்டும்' என வலியுறுத்தும் இலக்கியம்

(A) திருக்குறள்
(B) நாலடியார்
(C) நான்மணிக்கடிகை
(D) இன்னா நாற்பது

132. தெய்வத்திற்கு நிகரானவராக ஆசாரக்கோவை சுட்டுவதை – நிரல் படுத்துக

(A) அரசன், ஆசிரியன், தாய், தந்தை, தமையன்
(B) அரசன், ஆசிரியன், தந்தை, தாய், தமையன்
(C) தாய், தந்தை, தமையன், அரசன், ஆசிரியன்
(D) ஆசிரியன், அரசன், தாய், தந்தை, தமையன்

133. 'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்' என்ற வரிகளின் நூல், ஆசிரியர் யார்?

(A) ஔவையார், ஆத்திசூடி
(B) பாரதியார் புதிய ஆத்திசூடி
(C) ஔவையார், வாக்குண்டாம்
(D) ஔவையார், நல்வழி

134. புதிய ஆத்திசூடி – படைத்தவர்

(A) ஔவையார்
(B) பாரதியார்
(C) கம்பர்
(D) திருவள்ளுவர்

135. வடமொழிக் கருத்துக்கள் மிகுதியாக வருகின்ற கீழ்க்கணக்கு நூல்

(A) திரிகடுகம்
(B) ஆசாரக்கோவை
(C) பழமொழி
(D) நாலடியார்

136. 'வேளாண் வேதம்' என அழைக்கப்படும் நூல்

(A) நாலடியார்
(B) திருக்குறள்
(C) பழமொழி
(D) நான்மணிக்கடிகை

137. திருக்குறளை முதல் முதலாகப் பதிப்பித்தவர்

(A) அம்பலவாணத் தம்பிரான்
(B) பரிமேலழகர்
(C) மணக்குடவர்
(D) தருமர்

138. முதுமொழிக்காஞ்சியின் ஆசிரியர் யார்?

(A) மூன்றுறை அரையனார்
(B) காரியாசான்
(C) மதுரைக் கூடலூர் கிழார்
(D) கணிமேதாவியார்

139. 'பக்தி சாரர்' என்று அழைக்கப்பட்டவர்

(A) திருப்பாணாழ்வார்

(B) திருமழிசை ஆழ்வார்

(C) குலசேகர ஆழ்வார்

(D) தொண்டரடிப் பொடியாழ்வார்

140. மாணிக்கவாசகர் அமைச்சராக இருந்த அரசர்

(A) ஆரிய அரசன் பிரகதத்தன்

(B) பாண்டியன் நெடுஞ்செழியன்

(C) அரிமர்த்தன பாண்டியன்

(D) இளந்திரையன்

141. 'தம்பிரான் தோழன்' என அழைக்கப்பட்டவர்

(A) திருஞானசம்பந்தர்

(B) திருநாவுக்கரசர்

(C) மாணிக்கவாசகர்

(D) சுந்தரர்

142. விருத்தப்பாவால் இயற்றப்பட்ட முதல் காப்பியம்

(A) சிலப்பதிகாரம்

(B) மணிமேகலை

(C) சீவக சிந்தாமணி

(D) வளையாபதி

143. உதயண குமார காவியம் எத்தனை காண்டங்களை உடையது?

(A) 5

(B) 6

(C) 7

(D) 8

144. தாண்டக வேந்தர் என்று போற்றப்படுபவர்

(A) திருஞானசம்பந்தர்

(B) திருமூலர்

(C) திருநாவுக்கரசர்

(D) சுந்தரர்

145. எட்டுத்தொகை நூல்களுள் அடிஅளவால் சிறிய நூல்

(A) குறுந்தொகை

(B) ஐங்குறுநூறு

(C) நற்றிணை

(D) கலித்தொகை

146. 'தொன்னூல் விளக்கம்' – ஆசிரியர்

(A) ஜி.யு. போப்

(B) டாக்டர் கால்டுவெல்

(C) வீரமா முனிவர்

(D) சீகன் பால்கு

147. 'திராவிடவேதம்' என்று அழைக்கப்படும் நூல்

(A) பெரிய திருவந்தாதி

(B) திருவாய் மொழி

(C) திருவாசிரியம்

(D) திருவிருத்தம்

148. பெண்ணின் பெருமையை முதன் முதலாகக் காவிய வடிவில் உலகிற்கு உணர்த்திய நூல்

(A) சிலப்பதிகாரம்

(B) மணிமேகலை

(C) சீவக சிந்தாமணி

(D) வளையாபதி

149. அஷ்டப் பிரபந்தத்தை இயற்றியவர்

(A) வீரகவிராயர்

(B) பரஞ்சோதி முனிவர்

(C) பிள்ளை பெருமாள் ஐயங்கார்

(D) வேதாந்த தேசிகர்

150. பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தவர்

(A) சேக்கிழார்

(B) கருவூர் தேவர்

(C) நாதமுனிகள்

(D) நம்பியாண்டார் நம்பி

151. 'முத்தமிழ்க் காப்பியம்' என்று அழைக்கப்படும் நூல்

(A) சிலப்பதிகாரம்

(B) மணிமேகலை

(C) சீவக சிந்தாமணி

(D) குண்டலகேசி

152. பரணி நூல்களுள் காலத்தால் முந்தியது?

(A) மோகவதைப் பரணி

(B) அஞ்ஞவதைப் பரணி

(C) தக்கயாகக் பரணி

(D) கலிங்கத்துப் பரணி

153. பலப்பட்டடைச் சொக்கநாதர் இயற்றிய நூல்

(A) அன்னம் விடு தூது

(B) நரி விடு தூது

(C) கிள்ளை விடு தூது

(D) புகையிலை விடு தூது

154. குழந்தை கை தட்டும் பருவத்திற்குப் பெயர்

(A) செங்கீரைப் பருவம்

(B) முத்தப் பருவம்

(C) சப்பாணிப் பருவம்

(D) சிற்றில் பருவம்

155. பிள்ளைத் தமிழ் எத்தனை வகைப்படும்?

(A) 10

(B) 4

(C) 6

(D) 2

156. தமிழகத்தில் முதன்முதலாக அச்சுக் கூடம் நிறுவிய கிறித்துவச் சான்றோர்

(A) வீரமாமுனிவர்

(B) போப் ஐயர்

(C) சீகன் பால்கு ஐயர்

(D) எல்லீஸ் துரை

157. காலத்தால் முந்திய பரணி நூல்

(A) தக்கயாகப்பரணி

(B) கலிங்கத்துப்பரணி

(C) மோகவதைப்பரணி

(D) பாசவதைப்பரணி

158. திருக்கைலாய ஞான உலாவை இயற்றியவர்

(A) குமரகுருபரர்

(B) சேரமான் பெருமாள் நாயனார்

(C) கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்

(D) பரஞ்சோதி முனிவர்

159. 'நல்லவன் பொய்கை களவம் நாற்பதுக்கு
வில்லவன் கால்தளையை விட்டகோன்'
என்ற பாடல் இடம்பெற்ற நூல் எது?

(A) மூவருலா

(B) தமிழ்விடு தூது

(C) கலிங்கத்துப்பரணி

(D) பிள்ளைத்தமிழ்

160. 'மாராயம்' என்பது

(A) போர்க் கருவி
(B) மதிலின் ஒரு பகுதி
(C) மன்னரிடம் பெறும் சிறப்பு
(D) கூட்டம்

161. 'கேண்மியா' எதற்கு எடுத்துக்காட்டாக கொடுக்கப்படுகிறது?

(A) வினைமுற்று
(B) சொல்லெச்சம்
(C) குற்றியலிகரம்
(D) குற்றியலுகரம்

162. இவற்றுள் ஒன்றிய தளை எது?

(A) காய் முன் நிரை
(B) மா முன் நிரை
(C) மா முன் நேர்
(D) விளம் முன் நேர்

163. இந்த வழி எந்த ஊருக்குப் போகிறது?
என்ற கேள்வியில் 'வழி' எனும் அஃறினை கூறப்பட்டுள்ள பாங்கு

(A) கேட்குந போல
(B) கிளக்குந போல
(C) இயங்குந போல
(D) இயற்றுந போல

164. பொருத்தமற்ற இணை எது?

(A) நீங்கல், நட்பு, எல்லை
(B) பகை, நேர்ச்சி, தகவு
(C) ஆக்கல், அழித்தல், கருவி
(D) ஆல், ஒடு, உடன்

165. மரம் என்பது இடுகுறிப் பொதுப் பெயராகும் பனை என்பது

(A) காரணப் பொதுப் பெயர்
(B) காரணச் சிறப்புப் பெயர்
(C) இடுகுறிச் சிறப்புப் பெயர்
(D) மரப் பெயர்

166. ஈற்றயலடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது

(A) நேரிசை ஆசிரியப்பா
(B) இணைக்குறள் ஆசிரியப்பா
(C) நிலைமண்டில ஆசிரியப்பா
(D) அடிமறிமண்டில ஆசிரியப்பா

167. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | புல் | 1. | மூவறிவுயிர் |
| (b) | சிதல் | 2. | நாலறிவுயிர் |
| (c) | தும்பி | 3. | ஓரறிவுயிர் |
| (d) | புள் | 4. | ஐயறிவுயிர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

168. 'போந்தை' என்பது

(A) பனம் பூ
(B) மகிழம் பூ
(C) வேம்பு
(D) ஆத்திப் பூ

169. மாமுன் நிரை, விளமுன் நேர் – வரும் தளை எது?

(A) நிரையொன்றாசிரியத் தளை
(B) இயற்சீர் வெண்டளை
(C) வெண்சீர் வெண்டளை
(D) கலித்தளை

170. உழிஞை, பாடாண் என இரு திணைகளிலும் வரும் துறை எது?

(A) கந்தழித் துறை
(B) தழிஞ்சித் துறை
(C) கிணைநிலைத் துறை
(D) கண்படைநிலைத் துறை

171. வஞ்சி மன்னன் பகைவர் நாட்டினைத் தீயிட்டுக் கொளுத்துவது

(A) பேராண் வஞ்சி
(B) மாராய வஞ்சி
(C) மழபுல வஞ்சி
(D) உழபுல வஞ்சி

172. பொருத்துக :

| ஆசிரியர் | | | சிறுகதை |
|---|---|---|---|
| (a) | ஆண்மை | 1. | கு.ப. ராஜகோபாலன் |
| (b) | திரை | 2. | ஜெயகாந்தன் |
| (c) | முள்ளும் ரோஜாவும் | 3. | புதுமைப்பித்தன் |
| (d) | விரக்தி | 4. | ந. பிச்சமூர்த்தி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

173. பொருந்தாத விடையைச் சுட்டுக.
புதுமைப்பித்தன் எழுதிய சிறுகதைகள்

(A) சாபவிமோசனம்

(B) பொன்னகரம்

(C) அக்கினிப் பிரவேசம்

(D) துன்பக்கேணி

174. பொருத்துக :

| நூல் | | | ஆசிரியர் |
|---|---|---|---|
| (a) | விநோதரசமஞ்சரி | 1. | தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் |
| (b) | மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் | 2. | சோமு |
| (c) | அக்கரைச் சீமையில் | 3. | வீராசாமி செட்டியார் |
| (d) | கானல் வரி | 4. | திரு.வி.க. |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

175. கீழ்க்காணும் கூற்றுக்களைக் கவனி

I. தமிழில் ஒப்பீட்டு அணுகுமுறை 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தே கால்கொள்ளத் தொடங்கியது

II. சங்கப்பாடல்களை உலகின் பிற வீரயுகப் பாடல்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தவர்கள் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், என். கே. சித்தாந்தா, எஸ். வையாபுரிப் பிள்ளை முதலியோர் ஆவர்

III. தமிழ் விரயுகப் பாடல்கள் செவ்வியல் மரபிலிருந்து வந்தவை என்று க. கைலாசபதி கூறுகிறார்

மேற்கண்ட கூற்றுக்களில் சரியான கூற்று/கூற்றுக்கள் யாவை?

(A) I சரி
(B) II, III சரி
(C) II சரி
(D) I, III சரி

176. உலக இலக்கியம் என்னும் தொடரை முதன்முதலில் ஆட்சிக்குக் கொணர்ந்தவர்

(A) ரெனிவெலாக்கு
(B) கதே
(C) ஆல்பர்ட் ஜெரார்டு
(D) பால்வான் தீகம்

177. கூற்று 1 : பிரெஞ்சுநாட்டினார் இலக்கிய ஒப்பாய்வில் ஒப்பீட்டிற்கு அழுத்தம் தந்தனர்

கூற்று 2 : அமெரிக்க நாட்டினர் இலக்கிய ஒட்டாய்வில் இலக்கியத்திற்கு அழுத்தம் தரவில்லை

(A) இரண்டு கூற்றுகளும் சரி
(B) இரண்டு கூற்றுகளும் தவறு
(C) முதல் கூற்று சரி; இரண்டாம் கூற்று தவறு
(D) இரண்டாம் கூற்று சரி; முதல் கூற்று தவறு

178. பொருத்துக

| | நூல் | | ஆசிரியர் |
|---|---|---|---|
| (a) | நான்மணிக்கடிகை | 1. | கணிமேதாவியார் |
| (b) | சிறுபஞ்ச மூலம் | 2. | கூடலூர் கிழார் |
| (c) | ஏலாதி | 3. | விளம்பிநாகனார் |
| (d) | முதுமொழிக்காஞ்சி | 4. | காரியாசான் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

179. அன்னைத் தமிழே அழுகுப் பெருநிலவே!
உன்னை வணங்குகிறேன் உயிர்த்தமிழே நீ வாழ்க!
என வாழ்த்துப்பா பாடியவர்?

(A) பாரதிதாசன்

(B) கவிஞர். சிற்பி

(C) வாணிதாசன்

(D) கண்ணதாசன்

180. "புதுக்கவிதை இரட்டையர்" என்று வல்லிக் கண்ணன்னால் அழைக்கப் பெறுபவர்கள்

(A) ந. பிச்சமூர்த்தி, கு.ப.ரா

(B) கு.ப.ரா, சுரதா

(C) வாணிதாசன், ந. பிச்சமூர்த்தி

(D) ந. பிச்சமூர்த்தி, சுரதா

181. திரு. அன்னகாமு அவர்கள் எழுதிய நூல்?

(A) மேல்மலை மக்கள்

(B) கீழ் மலை மக்கள்

(C) நாட்டுப்புறவியல்

(D) நாட்டுப்புறப்பாடல்கள்

182. நாட்டுப்புறப்பாடல்கள் தோன்றிய காலம்

(A) சங்க காலம்

(B) அறுதியிட்டுக் கூற முடியாது

(C) சங்க மருவிய காலம்

(D) தொல்காப்பியர் காலம்

183. 'பகைவனுக் கருள்வாய்-நன்னெஞ்சே!
பகைவனுக் கருள்வாய்'. - இவ்வரிகளுக்குச் சொந்தக்காரர்

(A) சோம சுந்தர பாரதியார்

(B) பாரதியார்

(C) கிருபானந்த வாரியார்

(D) பாரதிதாசன்

184. நாயன் மார்களின் வாழ்க்கை பற்றி நம்பியாண்டார் நம்பி எழுதிய நூலின் பெயர்

(A) திருத்தொண்டர் தொகை
(B) திருவிசைப்பா
(C) திருத்தொண்டர் திருவந்தாதி
(D) திருத்தொண்டர் உலா

185. தமிழகத்தில் முதல் வண்ணப்படமான 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' என்ற திரைப்படத்தை 1955-ல் வெளியிட்டவர்

(A) நடராஜ முதலியார்
(B) ரெங்காச்சாரி
(C) டி.ஆர். சுந்தரம்
(D) கே. சுப்பிரமணியம்

186. தமிழ்ப்பட உலகில் பேசும் படத் தந்தை என்று புகழப்படுபவர்

(A) கே. சுப்பிரமணியம்
(B) மேஜர் வார்ஷக்
(C) நடராஜ முதலியார்
(D) டி.ஆர். சுந்தரம்

187. 'ஐந்திரம்' - என்பதன் விளக்கம்

(A) கணபதியை வணங்குதல்
(B) பரமாத்மாவை இந்திரன் என்ற பெயரால் வழிபடுவது
(C) சிவனே தேவர்களில் உயர்ந்தவன்
(D) சக்தியே முதல் தெய்வம் என்பது

188. காணாபத்தியம் - என்பது

(A) பரமாத்மாவை இந்திரன் என்று வழிபடுவது
(B) சித்தர்களை வழிபடுவது
(C) பரமாத்மாவை கணபதி என்ற பெயரால் வழிபடுவது
(D) விஷ்ணுவே மேலான தெய்வம் என்பது

189. நாட்டுப்புற இயலின் தந்தை என்று அழைக்கப்படுபவர்

(A) ஜேக்கப் கிரீம் (Jacob Grimm)
(B) அடல்பெர்ட் குகன் (Adalbert Kuhn)
(C) தியோடர் பென்டே (Theodor Bendey)
(D) குரோக்கர் (Croker)

190. "பத்திரிகை படிக்காத நாளெல்லாம் பிறவாத நாளே" – என்று கூறியவர்

(A) காந்தியடிகள்

(B) சோமலெ

(C) அ.மா. சாமி

(D) மா.பா. குருசாமி

191. பொருந்தாத இணையைக் கண்டறிக

| | ஆசிரியர் | | இதழ் |
|---|---|---|---|
| (A) | ஆத்மாநாம் | – | ழ |
| (B) | பிரம்மராஜன் | – | மீட்சி |
| (C) | சுந்தர ராமசாமி | – | காலச்சுவடு |
| (D) | அழகிய சிங்கர் | – | கல்குதிரை |

192. இதழ்களைக் குறிக்கும் டையர்னல் (Diurnal) என்பது எந்த மொழிச் சொல்?

(A) இலத்தீன்

(B) எகிப்து

(C) கிரேக்கம்

(D) ஹீப்ரு

193. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | எழுத்து | 1. | 1970 |
| (b) | மணிக்கொடி | 2. | 1959 |
| (c) | வானம்பாடி | 3. | 1988 |
| (d) | காலச்சுவடு | 4. | 1933 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

194. "தலையங்கம் - செய்தித்தாளின் கருத்துக் கண்ணாடி" என மொழிந்தவர்

(A) டி.எஸ். மேத்தா
(B) ஜான் ஹோஹன்பர்க்
(C) ஆர்தர் பிரிஸ்பேனே
(D) எம்.வி. காமத்

195. திருச்சிராப்பள்ளி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் வெளிவந்த 'எழுத்தாளன்' இதழ் தொடங்கப்பட்ட ஆண்டு

(A) 1958
(B) 1968
(C) 1959
(D) 1961

196. இதழியல் கலை அன்றும் இன்றும் எனும் நூலின் ஆசிரியர்

(A) டாக்டர் அ. சாந்தா
(B) புலவர் என். வி. கலைமணி
(C) இதழாளர் சி.பா. ஆதித்தனார்
(D) டாக்டர் அ. சக்திவேல்

197. சுதேசமித்திரன் ஏட்டைத் தொடங்கி நடத்தியவர்

(A) ஜி. சுப்பிரமணிய ஐயர்
(B) பாரதியார்
(C) எம். பக்தவச்சலம்
(D) ராஜாஜி

198. 1799 இல் பத்திரிக்கைகளைக் கட்டுப்படுத்த வெல்லெஸ்லி பிரபு கொண்டு வந்த திட்டம்

(A) ஐந்து அம்சத் திட்டம்
(B) எட்டு அம்சத் திட்டம்
(C) பன்னிரெண்டு அம்சத் திட்டம்
(D) ஏழு அம்சத் திட்டம்

199. இதழில்'தலைப்புகள் விறுவிறுப்பாக இருக்க வேண்டுமானால் துடிப்புள்ள சொற்களைப் பயன்படுத்த வேண்டும்' - எனக் குறிப்பிட்டவர்

(A) பெரியார்
(B) அண்ணா
(C) சி.பா. ஆதித்தனார்
(D) என். சிவராமன்

200. கார்ட்டூன் வெளியிடப்பட்ட முதல் தமிழ் இதழ்

(A) இந்தியா
(B) சுதேச மித்திரன்
(C) தின வர்த்தமானி
(D) தேசபக்தன்

SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK

SEAL